Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-௨௮

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசு ௵ ஐப்பசி – கார்த்திகை ௴ 1965 அக்டோபர்	பகுதி 7

MEMBERS OF THE EDITORIAL BOARD

1. Sri A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY, M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00]　　[தனிப் பிரதி 25 பை.

பொருளடக்கம்

1. வீணை மீட்ட வேண்டும் ... 121
2. மதிய உணவுத் திட்டத்திற்கு ஆரோக்கிய வாழ்க்கையில் முக்கிய பங்கு உண்டு ... 123
3. தீபாவளி ... 124
4. பாட்டுக்கொரு புலவன் ... 125
5. மதகுபட்டி வட்டார ஆசிரியர் சங்க கூட்டம் ... 127
6. ஊக்கம் தந்த உயர்வு ... 128
7. சர்ச்சிலின் பிரசங்கம் ... 130
8. உயிர் காக்கும் பணியாற்றும் "கருணை பறவை" ... 131
9. கல்வி எதிரொலி (Education Echo) ... 132

Printed by Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and Published by Sri L. Mariapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

பாலர் கல்வி

தொகுதி 30	விசுவாவசு ஐப்பசி — ஐப்பசி கார்த்திகைமீ 1965—அக்டோபர்	பகுதி 7

வீணை மீட்ட வேண்டும்

போரில் ஈடுபட்டுள்ள இந்திய வீரர்களுக்குப் பயன்படும் போர் நிதிக்குத் தந்துதவாதவர்களே இந்நாட்டில் எனலாம். தொழிலாளிகளும் நன் கொடை நல்கினர். முதலாளிகளும் நன்கொடை தந்தனர். ஆண்களும் தந்தனர். பெண்களும் தந்தனர். பெரியோரும் தந்தனர். சிறியோரும் தந்தனர். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரும் தந்தனர். அரசிதழ் பதிவு பெருத அலுவலரும் தந்தனர். குப்பை கூட்டுவோரும் கொடுத்தனர். கடைநிலை ஊழியரும் கொடுத்தனர்.

தமிழகத்தின் செயலகத்தில் Secretariat of Tamilnad) பணிபுரிவோர் போர்நிதிக்குக் கீழ்க் காணுமாறு தங்கள் ஊதியத்திற்கேற்பக் கொடுத் துதவியதாகக் கேள்விப்படுகிறேம்.

மேற்பார்வையாளர்கள் (Superintendents) ரூ. 10-ம், உதவியாளர்கள் (Assistants) ரூ. 5-ம், கீழ்நிலை எழுத்தாளர்கள் (Lower Division clerks) ரூ. 3-ம், கடைநிலை ஊழியர்கள் (class four servants) ரூ. 2-ம், பெருக்குவோர் ரூ. 1-ம் போர் நிதிக்குக் கொடுத்தனர்.

ஆனல், ஆசிரியர்களாகிய நாம் போர் நிதிக்கு நன்கொடையாகக் தந்த பணம் எவ் வளவு? பஞ்சப்படி உட்பட ஒரு திங்கள் ஊதியம் எவ்வளவோ அந்த ஊதியத்தில் ஒரு நாள் ஊதி யத்தை நன்கொடையாக நல்கியுள்ளோம். இப் படிப் பார்த்தால், B. T. ஆசிரியர்கள் ரூ. 5-க்கு மேலாகவும், இடைநிலை ஆசிரியர்கள் ரூ. 3-க்கு மேலாகவும், போர் நிதிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்பது புலனுகும்.

எதற்கு இதனை நாம் எடுத்துக் காட்டுகிறேம்? நம்மைப் பற்றித் தற்பெருமைத் தம்பட்டம் தட்டிக் கொள்ளவா? இல்லை. இல்லை. நமது வருமானம் மிக மிகக் குறைவென்றலும் நாட்டுப் பற்றில் நாம் பிறருக்குப் பிற்பட்டவர்களல்லர் என்று நாம் தெரிந்து கொள்ளத்தான்.

நடுவரசின் பணிமனைகளில் பணிபுரியும் ஊழி யர்களுக்கு எப்போதோ கட்டாயச் சேமிப்புத் திட்டம் கைவிடப்பட்டது. ஆனல், நாமோ உயர்த்தப்பட்ட சேமநலநிதி (Enhranced T.P.F.) என்னும் பெயரில், திங்கள்தோறும் ஒரு குறிப் பிட்ட தொகையைச் சேமநல நிதியுடன் (T.P.F.) மிகப் பெருமையுடன் செலுத்தி வருகிறேம்.

சேமநல நிதி, உ. ப. சே. நல நிதி, கடன்கள் ஆகிய பிடிப்புக்கள் போக மிக மிகக் குறைந்த சம்பளம் வாங்கும் நாம் சென்ற திங்கள் இன்னும் குறைந்த சம்பளம் வாங்குகிறேம். எனினும் நாம் வருந்தவில்லை; பெருமை கொண்டோம். நாடிருந்தால்தான் நாமிருக்க முடியும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத் தெளி தெளிவாக உணர்கிறேம்; உணர்த்தியும் வரு கிறேம்.

ஒரே தகுதியுடைய ஆசிரியர்களில் சிலர் நடு வரசின் பள்ளிகளிலும், சிலர் மாநில அரசின் பள்ளிகளிலும், மிகப் பலர் தனியார்ப் பள்ளிகளி லும் பணி புரிகின்றர்கள். இவர்களுக்கு ஒரே சீரான ஊதியம், சேவைத் தனி நிலைமைகள், (Service Conditions) சலுகைகள் முதலியன உண்டா என்றல், இல்லை. தனியார்ப் பள்ளிகளி லும், அரசின் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர் களுக்கிடையே ஊதியம், சேவைத் தனி நிலை மைகள், ஓய்வூதியம் (Pension) போன்றவற்றில் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறு பாடுகளை எல்லாம் சமதருமக் கொள்கையைக்

கொண்ட நம் அரசு மிக விரைவில் போக்க வேண்டும் என்றுமிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

இந்த நேரத்திலா? மாற்றான் நம்மைத் தாக்கிடும் நேரத்திலா? சலுகைகள் கேட்பது. இது வீடு தீ பற்றி வேகும்போது வீணை மீட்ட வேண்டும் என்று கேட்பது போலல்லவா இருக்கிறது என்று சிலர் எண்ணலாம்.

வீடு தீ பற்றி வேகும்போது தீயைப் பாடுபட்டு அணைப்போம்; ஓடியோடி அணைப்போம்; இளைக்காமல் சளைக்காமல் அணைப்போம். தீயை அணைக்கும் போது மகிழ்ச்சியின் அறிகுறியாக வீணை மீட்டத்தான் வேண்டுமல்லவா?

இறைவன் அருளால் பகைவர் வீழ்க; நாடு லம் பெற்று வாழ்க. அதற்கு ஆசிரியர்களாகிய நாம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்யத் திட சிந்தையுடன் எப்போதும் காத்திருக்கிறோம். மாணவர்களுக்கு அறிவாகிய நல்லமுதுடன் நாட்டுப்பற்று என்னும் நல்லமுதையும் ஊட்டுவோமாக. இனி நமக்குப் பகையே இல்லை, பகைவரே இல்லை என்னும் சூழ்நிலையை உருவாக்க உழைப்போமாக. அந்தக் காலம் வரத்தான் போகிறது. அப்போது இந்த உலகம், நம் நாடு அமைதியும், வீரமும் வாழும் நாடு என்ற உண்மையை உணரத்தான் போகிறது. நம் தாயகத்தை அநீதி முறையில் அழிக்கவோ, அதன் பகுதிகளை அபகரிக்கவோ முடியாது. அப்படிச் செய்ய முயல்வோருக்கு நல்ல பாடம் புகட்டப்படும் என்னும் உண்மையைத் திண்மையாக எதிர்காலக் குடி மக்களுக்கு உணர்த்தும் பொறுப்பு ஆசிரியச் சமுதாயத்திற்கு உண்டு. அப்பொறுப்பினை நாம் குற்றங் குறையின்றி நிறைவேற்றுவோமாக. ★

From,
The Director of Seeondary Education,
Madras.

To

The General Secretary,
The South India Teacher's Union,
Raja Annamalaipuram,
Madras-28.

Re: No. 161264-G2/65 Dated 16-10-65

Sir,

Sub: Education—Secondary—Hindi Pandits holding Vidwan title in Tamil-Exemption from possessing pandits Training qualifications—Regarding.

Ref: Your letter Dated 27-8-65.

I am to inform you that the matter is being examined and a reply will be sent in due course.

(Sd.)..

for Director of Secondary Education.

மதிய உணவுத் திட்டத்திற்கு ஆரோக்கிய வாழ்க்கையில் முக்கியப் பங்கு உண்டு

(இதுதான் பிரிட்டன் (June 15, 1965) என்னும் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

இன்றையப் பிரிட்டிஷ் பள்ளிக் குழந்தைகள்—இவர்களுடைய எண்ணிக்கை சுமார் 9,000,000—முந்திய தலைமுறைக் குழந்தைகளைவிட ஆரோக்கியமாக இருக்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆரோக்கிய வாழ்க்கைப் பிரசாரத்தில் பள்ளிக்கூட மதிய உணவுத் திட்டத்திற்கு முக்கிய இடம் உண்டு.

பிரிட்டனில் சர்க்கார் நிர்வாகத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகளில் நூற்றுக்கு அறுபது பேர்கள், வேளைக்கு ஒரு ஷில்லிங் (67 பைசாக்கள்) செலுத்தி மதிய உணவு எடுத்துக் கொள்கிறார்கள். இந்தக் கட்டணம், ஒரு வேளை உணவின் அடக்க விலையில் பாதிதான் என்றாலும் இந்தத் தொகையைச் செலுத்தமுடியாத ஏழைக் குழந்தைகளும் உண்டு. இந்தக் குழந்தைகளுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.

இதைத் தவிர, சர்க்கார் பள்ளிக் கூடங்களில் பயிலும் குழந்தைகள் அனைவருக்கும் தலா ஒவ்வொரு பாட்டில் (சுமார் ஆறு அவுன்ஸ்) பால் இலவசமாக, காலை நேரத்தில் வழங்கப்படுகிறது. சர்க்கார், மதிய உணவுத் திட்டத்திற்காக (பெற்றோர்கள் பங்கைத் தவிர) ஆண்டுக்கு 64,000,000 பவுன்களை (85.33 கோடி ரூபாய்களை) யும் பால்வழங்கு திட்டத்திற்காக ஆண்டுக்கு 14,000,000 பவுன்களை (18.67 கோடி ரூபாய்களை)யும் செலவிடுகிறார்கள். (சமுதாய நலத் திட்டத்தின்கீழ் கர்ப்பிணிகளுக்கும், கைக்குழந்தையுள்ள தாய்மார்களுக்கும், பள்ளிப் பருவம் எட்டாத குழந்தைகளுக்கும் சத்துணவுப் பொருள்கள், பால் முதலியவற்றை வழங்குவதற்காக, ஆண்டுக்கு 35,000,000 பவுன்களை (46.67 கோடி ரூபாய்களை) சர்க்கார் செலவிடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது).

குழந்தைகள் ஆரோக்கியமாக வளருவதற்கு ஏற்ற முறையில் சத்துமிக்க உணவுகளை வழங்குவதுதான் மதிய உணவுத் திட்டத்தின் பிரதான நோக்கம். பள்ளிக்கூட உண்டிச் சாலையில் பலருடன் பழகும் போது நயமாகவும் சகிப்புத் தன்மையுடனும், நட்புறவுடனும் பழகும் வாய்ப்பு குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. ஆகையால் இதை ஊக்கவேண்டும் என்பதும் திட்டத்தின் மற்றோர் நோக்கமாகும். ஊட்டக் குறைவினால் குழந்தைகள் வளர்ச்சி குன்றி, உற்சாகமிழந்து, நோய் வாய்ப்படக்கூடும். இதைத் தவிர்ப்பதே மதிய உணவுத் திட்டத்தின் நோக்கமாகையால் உடலுக்குப் பாதுகாப்பும் வலிமையும் அளிக்கக்கூடிய உணவு வழங்குவதில் தனிக் கவனம் செலுத்துகிறார்கள்.

உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் அனைத்தும் ஓர் உணவிலிருந்து கிடைக்காது. சர்க்கரை, வெள்ளை ரொட்டி, சாதம் முதலியவை ஊக்கம் தரும் பொருள்கள் என்றாலும் அவற்றில் புரதச் சத்து மிகவும் குறைவு. முட்டை, மீன், பாலேடு, இறைச்சி முதலியவை

புரதச் சத்துமிக்கவை. குழந்தைகள் ஓடியாடி விளையாடக்கூடியவர்கள். சுறுசுறுப்புடையவர்கள். குழந்தைப் பருவத்தில் உடல் துரிதமாக வளர்ச்சியடைகிறது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு சமச்சீரான உணவைக் குழந்தைகளுக்கு வழங்குவதில் கவனம் செலுத்துகிறார்கள். அந்த அந்தக் காலத்தில் கிடைக்கும் காய்கறிகளையும் பழங்களையும், குழந்தைகளுக்கு அலுப்புத் தட்டாத முறையில், உணவில் சேர்த்து வழங்குவதிலும் கவனம் செலுத்துகிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு குழந்தைக்கும் 1000 கலோரி ஊக்கம் வழங்கக்கூடிய முறையில் மதிய உணவைத் திட்டமிட்டுத் தயாரித்து வழங்குகிறார்கள்.

தீபாவளி

எம். எஸ். அருள்சாமி, நாட்டரசன் கோட்டை.

அருமையான துணிகள் மக்கள்
அழகாய்க் கட்டும் நாளடா!
வறுமை எல்லாம் மறந்து மகிழும்
வாழ்வில் பெரிய நாளடா!
ஏழைகூடப் புதிய துணிகள்
எடுத்து உடுத்தும் நாளடா!
கூழை விட்டுப் பட்சணங்கள்
கூடித் தின்னும் நாளடா!
பாலர் எல்லாம் மகிழ்ச்சியாலே
பாடி ஆடும் நாளடா!
கோலை ஊன்றிக் கிழவர்கூடக்
குதித்து ஆடும் நாளடா!
வெடிகள் எல்லாம் வீதி எங்கும்
வெடிக்கும் இன்ப நாளடா!
கொடுமை செய்த அசுரன் தன்னைக்
கொன்றொழித்த நாளடா!
இனிமையான பட்சணங்கள்
கனிவாய்த் தின்னும் நாளடா!
மனிதர் வாழ்வில் வருடந்தோறும்
வந்து போகும் நாளடா!

பாட்டுக்கொரு புலவன்

சிதம்பரம் சுவாமிநாதன்

தமிழகத்து மண்ணிலே தமிழ் மொழியாம் தேரினைப புதுயுகத்து நெறியிலே புது வழியில் செலுத்திய சாரதியார் பாரதியார். காலத்தை வென்ற கவிஞராய் ஞாலத்தில் நின்ற பாரதியார் கன்னித் தமிழ் மொழியில், கற்கண்டுச் சுவைக் கவிகள் பண்ணிசைத்துப்பாடினர்; பைந்தமிழுக்கு ஆக்கந்தேடினர்.

பாரதியார் வாழ்ந்திருந்த காலம், பாரதம் அடிமையிலே வீழ்ந்திருந்த காலம்; தாய் மொழியும், தாய் நாடும் தளர் வடைந்த காலம். பொறுப்பாரோ கவிஞர்; பொங்கி எழுந்தார்; மங்கியிருந்த பழம் பெருமையை மாத்தமிழால் பாடி முழக்க மிட்டார்; வாட்டும் வறுமைத் தீ நின்று, வள நாட்டின் புகழுரைத்துப் பாட்டுக் கொரு புலவராய் நின்றார்; பழம் பாதை புதுக்கியதில் சென்றார்; பூவுலகில் புகழ் வெற்றி கண்டார்.

பாரதியார் பாடல்கள் கருத்தோட்டம் செறிந்த கவிப் பூந்தோட்டம்! முக்காலமும் உணர்ந்து எக்காலமும் பாடுவதற்கு ஏற்ற வண்ணம் இறவாப் புகழுடைய இனிய பெருங் கவிதைகளைப் பண்டிதரும், பாமரரும் புரிந்து கொள்ளும் நடையினிலே, சந்தச்சிந்து வடிவினிலே, சங்கத்தமிழும் நடமாடப் பாடிக் குவித்தார்.

அவர்தம் கவிதைகள் இனியன இளைஞர்க்கு; புதியன புலவர்க்கு; எளியன எல்லோர்க்கும். உள்ளம் உருக்குமொரு பாடலென்றால், நல்ல ஊக்கம் கொடுக்குமொரு பாடல்! கள்ளம் கரைக்குமொரு பாடல் என்றால் கருணைக் கண்ணீர் விளைக்கு மொரு பாடல், வீரம் விளக்கு மொரு பாடல்! காதல் கிளர்த்து மொரு பாடல் என்றால் கடவுள் வேதம் உணர்த்து மொரு பாடல்! சுருங்கச் சொல்லின், யாமறிந்த கவிஞரிலே புதுமைக்கவி பாரதிபோல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. இனியவர்தம் கவித்திறமை அறிவோம்; சொல்லழகு வியப்போம்; பொருளாழம் காண்போம்; முடிந்தவரை முயல்வோம்.

> " செந்தமிழ் நாடெனும்
> போதினிலே—இன்பத்
> தேன் வந்து பாயுது
> காதினிலே. "

இந்தக் கவிதையைச் சொல்லாதவர் தமிழகத்தில் யாருளார் ? ஒருகால் இருப்பின் அவர் ஏனுளார் ?

தமிழ் மொழி தனித் தியங்கும் தன்மை வாய்ந்த உயர்தனிச் செம் மொழி; இலக்கிய வளமும், இலக்கண நலமும் பொருந்திய இனிய மொழி. இத்தகைய செம்மைத் தமிழைச் செந்தமிழ் என்றனர் ஆன்றோர். இக்கருத்தினை மனத்திலிருத்திப் பாரதியார் நம்நாட்டினைச் செந்தமிழ் நாடென்றார். செந்தமிழ் அன்னை செங்கோல் செலுத்தும் நாடென்று நினைக்கையிலே இன்பத் தேன் காதிலே பாய்கிறதாம். அன்னை யல்லவா அன்புத்தேன் சொரிந்து, கருணைத் தேனளித்து, அறிவுத்தேன் பொழியும் அன்னையை நினைக்கும் போது தமிழ்த்தேன் சுவைத்தேன்; அறிந்தேன்; உணர்ந்தேன் ; எனப்பிறரும் சொல்லக் கேட்கும் போது இன்பத்தேன் பாயாமல் துன்பத்தேனா கொட்டும்?

கருணையின் வடிவமாய தாயை வணங்கிய பாரதியார் அததோடு உளநிறைவு அடையவில்லை. அந்நாள் அடிமை நிலையினை நினைத்தார். வாழ்ந்து கெட்டது போதும், இனிவீரம் விளைவிக்க வேண்டுமென எண்ணினர் போலும்! துடித்தது மீசை! ஆசை படைத்தது கவிதை.

> " எங்கள் தந்தையர் நாடென்ற
> பேச்சினிலே—ஒரு
> சக்திபிறக்குது
> மூச்சினிலே ! "

வீரம் விளைவிக்கும் ஆண்மையினை எண்ணி, ஆண்மையின் உருவமாய் தந்தையரையெண்ணி, அன்புத் தாய் நாட்டை வீரத்தந்தையர் நாடென்று கூறிச் சக்தி பெறச் செய்கிறார் கவிஞர். தமிழகம் எதிர்காலத்தில் எல்லைத் தொல்லையில் சிக்கித்தவித்துச் சீரழியக்கூடாது என முன்னரே நினைத்தார் பாரதியார்.

> " வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ் கூறு நல்லுகத்து "

எனப்பழம் பெரும் முதல் நூலாம் தொல் காப்பியத்துக்குப் பாயிரம் பாடிய பனம்பாரனர் கூற்றையும்,

> " நெடியோன் குன்றமும்
> தொடியோன் பெளவமும் "

எனக்கூறி வழிமொழிந்த இளங்கோ கூற்றையும் எண்ணிப் பார்த்தகவிஞர் ஏற்ற முற்றார். சுதந்தர இந்தியாவில் மொழி வழிமா நிலங்கள் ஏற்படுமென்றும், எல்லைகள் வரையறுக்கப்படுமென்றும் அந்நாளே நினைத்த பாரதியார் தந்நாட்டு எல்லையைத்தாமும் தம்பாட்டால் வரையறுத்து வைத்தார். முந்தையோர் முடிபே அவர் முடிபாயினும் அதைச் சொல்லும் விதத்திலேதான் அவர் தம் கவித்துவத்தைக் காண முடிகிறது; ஆழமான

பொருளை அறிய முடிகிறது. பழகு தமிழிலே பாரதியார் பாடுகிறார்:

“ நீலத்திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு ”

தமிழ் நாட்டில் மண்டிக் கிடப்பது மறைந்தொழியும் பொன்னல்ல; அறியாமை, பொறாமை அல்ல; அநியாயம், அதருமம் அல்ல. நாட்டில் மண்டிக் கிடப்பது—எங்கும் நிறைந்து மிடைந்து செறிந்து கிடப்பது புகழ்! புகழ்!! புகழ்!!!

“ தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று ”

என்ற வள்ளுவர் நெறிநின்றதமிழர் புகழெனின் உயிருங்கொடுப்பர். அங்ஙனம் உயிர்கொடுத்துப் புகழ்கொண்டதொண்டர் பல்லாயிரவர் தோன்றிய மண்ணிலே புகழ் அல்லாமல் வேறெதுவாய் இருக்கமுடியும்?

வான்பொய்ப்பினும் தான்பொய்யாப் பூ விரி மணங்கமழ் காவிரியும், தென்பெண்ணையும் பாலாறும், சங்கத்தமிழ் கண்ட தங்கத்தண்புனல் வையையும், பொன் திணிந்த பொருனையும் நீர் வளங் காட்டவும்—நீர்வளம், நிலவளம் காட்டவும்—நிலவளம், ஏர் வளங்காட்டவும்—ஏர்வளம், எழில் வளங்காட்டவும் புகழ் நலம் மண்டியதா தமிழ் நாடு? இருக்கலாம்; இம்மட்டோ!

வேதம் நிறைந்ததனால், வீரம் செறிந்ததினால் காதல் புரியும் அரம்பையர்போல் இளங்கன்னியர் சூழ்ந்ததனால் புகழ் மண்டியதா? இருக்கலாம். இன்னுமுண்டு. திரிபுரமெரித்தவிரி சடைக்கடவுளால் தோற்றுவிக்கப்பட்டுக் குன்றமர்ந்த குமரவேளாற் கொடுக்கப்பட்டுக் குறுமுனிவன் அகத்தியனால் அழகைப் பெற்றுக், கல்வி சிறந்தோங்கப் புகழ்க் கம்பன் பிறந்தோங்கப் பல விதமாயின சாத்திரத்தின் மணம் பாரெங்கும் நிறைந்தோங்கப் புகழ் மணடியதா? இருக்கலாம்; உண்மையே! ஆயின், இது மட்டுமல்ல வான்புகழக்குக் காரணம்.

முப்பாலைப்புகட்டியதில் தப்பாது வீட்டுலகைச் செப்பாமற் செப்பிவிட்டவள்ளுவரை உலகினுக்கே உவந்தனித்தினால்—நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்ததினால்—சிங்களம், புட்பகம், சாவகம், சீனம் மிசிரம், யவனமுடன் தேசம்பலவும் சென்றே வாணிகம், ஞானம் இமயம் எறிவில் புலி கயலைப் பொறித்ததினால் தமிழ் நாட்டில் புகழ் மண்டியதோ? உண்மையிவை உண்மையே! ஆயினும். புகழ் மண்டக்காரணம் இவற்றுக்கும் மேலொன்று உண்டாம். பாரதியார் கூறுகிறார்.

நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவஞ்செய்யும் குமரியன்னை தெற்கெல்லைக்குக் காவலாம். குன்று மேல் நின்ற மாதவன் மாலவன் வடக்கெல்லைக்குக் காவலாம். இதன் பொருளென்ன?

பழம் பெரும் தமிழகம் பெருங்கண்டத்தளவிலே பெருமையோடு இலங்கிற்று என்பர் வரலாற்றாசிரியர். முப்புறம் கடல் சூழ்ந்த முத்தமிழ் நாட்டிலே கடற்கோள் ஏற்பட்டது பலமுறை! ஆர்த்தெழுந்த அலைகடல் முதற்சங்கம் வைத்த ஆதி மதுரையை விழுங்கிற்று; இடைச்சங்கம் கண்டக பாடபுரத்தை விழுங்கிற்று; பன்னாற்றடுக்கத்துப் பஃறுளியாற்றையும் குமரிக் கோட்டத்தையும் விழுங்கிற்று! ஆயிரமாயிரம் செல்வங்கள் அலைகடலில் அழிந்து பட்டன; ஒழிந்து விட்டன. அக்கடல் முக்கடலாய் முப்புறமும் முழங்கியார்த்துச் சூழ்ந்திருக்க, எஞ்சிய தமிழ் நாடு நின்றிருக்கும் கோலம் கண்டார் பாரதியார். கொடுங்கடல் கொடுத்த கொடுமையினை எண்ணினார்; கண்ணீர் பெருக்கினார்; கடவுளை வேண்டினார். ஆங்கே, முக்கடலும் கூடுகின்ற முனையிலே—நீலத்திரைக் கடல் ஓரத்திலே நிற்கின்ற தெய்வத்தைக் காண்கிறார். கவிஞருக்கு மனத்திலே மகிழ்ச்சி வெள்ளம்! பாடுகிறது அன்னார்தம் பாடலுள்ளம்!

“ நீலத்திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை ”

‘கன்னித் தமிழுக்குக் கடற்கோளால் துன்பம் வரின் காணச்சகியேன் இனியென்று, கன்னித் தெய்வமொன்று, முனையோரம் நின்று, கடலைக் கையமர்த்திக் காவல் புரியத் தொடங்கி விட்டதாம்; கடலும் அடங்கி விட்டதாம்! சாதாரணக் காவலா அடங்காமலிருக்க? ஆகா! காவலுக்குரியவள் கன்னி! காவல் புரிபவளும் கன்னி! எண்ணியெண்ணிப் பார்க்க இன்பவெள்ளம்! பழமைக்குப் படிமையான தெய்வத் தமிழன்னை இன்னும் கன்னியாய் இருக்கின்ற மாட்சியும், பார்க்கின்ற காவலுக்கென்றே தெய்வக் குமரியன்னை இன்னும் கன்னியாய் இருக்கின்ற காட்சியும் நினைக்க நினைக்க நெஞ்சிலே இன்பத்தேன் சுரக்கிறது.

நிற்கின்ற தெய்வம் நித்தம் தவம் வேறு செய்கிறதாம்; கவிஞர் கூறுகிறார். மக்கள் தெய்வத்தை நோக்கித்தாமுயரத் தவஞ் செய்வர். ஆனால், இங்கே தெய்வமே தவஞ் செய்கிறதாம் தமிழ் நாட்டு வாழ்வுக்காக!

“ இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர் ”

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்காக நோற்காதிருக்கின்ற பலருக்காகத்தானே நோற்றுத் தவமிருந்து தமிழை வாழச் செய்கிறாளாம் குமரியன்னை! அதுவும் எங்ஙனம்? ஒரு கால், ஒரு நாள் நிறுத்திவிட்டால் ஓவென்றெழுந்து வருமோ கடலென்றெண்ணி நித்தம் தவஞ் செய்கிறாளாம். சிறிதே அமர்ந்தாலும் சீறிவரும் அலையென்று நின்றே

தவஞ் செய்கிருளாம். தெய்வத்துக்குத்தான் நம்மிடம் எத்தனை கருணை! * இனி வடக்கெல்லை நோக்குவோம்.

மாயவன் குன்றம் என்பது வேங்கடவன் மலையாகும்; திருப்பதி என்னும் திருமலையாகும். மாலவன் என்ற சொல்லுக்குப் பெருமைக்குரியவன் என்பதே பொருள். காக்கும் கடவுளாகிய திருமாலே திருவேங்கடநாதனாய் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிருர். பாரதியார் கூறுகிருர். மாலவனுர் பெருமைக்குரிய செயலாற்றக் குன்றேறி நிற்கிருராம். என்ன செயல் தெரியுமா? தமிழ் நாட்டின் வடக்கெல்லைக்காவல்! காக்கும் கடவுளாகிய திருமாலே காவல் காக்கும் பெருமையுடைத்து தமிழ்நாடு என்கிருர் கவிஞர்.

திருமால் எங்ஙனம் காவல் காக்கிருர்? ஒரு மலையல்ல; இரு மலையல்ல; ஏழுமலை ஏறிக் காவல் காக்கிருர். மேலும், காவல் புரிபவர் வேறு பலவிடங்களில் படுத்திருந்தாலும் அமர்ந்திருந்தாலும் அதையெல்லாம் மறந்து, செயலுணர்ந்து மலைமீது நின்றே காவல் புரிகிருர் பாவம்! இல்லத்தரசிகள் இரு தேவிமாரையும் விட்டுவந்து தனியே நின்று நம் பொருட்டுக் கால் கடுக்கக் காவல் புரிகிருர். இங்ஙனம் காக்கும் கடவுளே கன்னித் தமிழ் நாட்டைக் காவல் புரியும்போது, 'துன்பமென்பது ஏது?' என்கிருர் கவிஞர்.

ஆக, மலை மீது நிற்கிறது ஆண் தெய்வம்; நீர்க்கரை நிற்கிறது பெண் தெய்வம், ஆகா! ஆணுக்கும் பெண்ணுக்கும் சரி சம வாய்ப்பு! ஆண்மையுணர்த்தி நிற்கிருன் மாலவன்; அருளுணர்த்தி நிற்கிருள் அன்னை குமரி. ஆண்மையும் அருளும் கொண்டோர் அருந்தமிழ் நாட்டாரென்று சொல்லாமற் சொல்லி நிற்கிருர்கள் போலும்! இவ்விரு தெய்வங்களுமே விரும்பி வந்து நம் நாட்டைக் காவல் புரிகின்றனவென்ருல் இஃதொன்றே தமிழ்நாடு புகழோடு விளங்குவதற்குச் சான்று.

இவற்றையெல்லாம் நினைத்த கவிஞரின் உள்ளம், முந்தையோர் சிந்தையில் வீற்றிருந்த தெய்வ நெறியின் விந்தையோடு நோக்கி, நினைத்ததைச் சொல்ல விழைகிறது. எளிய சொல்லமைத்துப் பெரிய பொருளமைத்துப் புதிய நடையமைத்துப் புதுயுகக் கவிஞர் பாடி மகிழ்விக்கின்ருர். மீண்டுமொருமுறை பாடலை நோக்குவோம்.

" நீலத்திரைக் கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே— புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு "

முதலில் இப்பாடலைப் பாடியதற்கும், கவிஞர் தம் உள்ளக் கிடக்கையை இதுகாறும் ஆராய்ந்து அறிந்து வியந்து புகழ்ந்து மீண்டும் இப்போது பாடியதற்கும் உள்ள வேற்றுமையை அறிக. 'இதுவல்லவோ கவி' என்று எண்ணம் தோன்றும். 'இவனல்லவோ கவிஞன்' என்ற எண்ணம் தோன்றும். அங்ஙனம் தோன்றுமாயின் அஃதே இக்கட்டுரையின் எண்ணம்.

* இக்காலத தமிழ் நாட்டின் வடவெல்லையாக மாலவன குன்றம் இல்லை. அஃது ஆந்திர மாநிலத்தில் சேர்க்கப்பட்டு விட்டது. ஆயினும் மாலவன் குன்றத்துக்குப் பதிலாக எல்லையிலே வேலவன் குன்றம் தமிழ் நாட்டில் அமைந்துள்ளது. அதிலுமொரு வியப்பு! வேலவனும் மலைமீது (திருத்தணிகை) நின்றே காவல புரிகின்ருன். அவனே தமிழ்ப்பெரும தெய்வம!

மதகுபட்டி வட்டார ஆசிரியர் சங்க கூட்டம்

மதகுபட்டி வட்டார ஆசிரியர் சங்கக் கூட்டம் சிவகங்கை பள்ளித் துணை ஆய்வர் திரு. ஏசுடியான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி அறிக்கை படித்தார். கூட்டத்தில் தற்போது நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும்நெருக்கடியில் ஆசிரியர்களின் பங்கு யாது? என்பதுபற்றி சிவகங்கை ஊராட்சி ஒன்றிப்புக் கல்வி அலுவலர் திரு. அழகர்சாமி அவர்களும், சிவகங்கை தாலூகா ஆசிரியர் ஐக்கியக் கழகத் தலைவரும், தென்னிந்திய ஆசிரியர் சங்க இணைச் செயலாளருமான திரு. எம். எஸ். அருள்சாமி அவர்களும் சிறப்புரை ஆற்றினர்.

திரு. அருள்சாமி அவர்கள் மேலும் கூறியதாவது, தென்னிந்திய ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களுக்கு ஓர் கேந்திரமாக விளங்கி ஆசிரியர்களின் இன்னல்களைப் போக்குவதற்கான மகத்தான பணியினைச் செய்து வருகிறதென்றும், சௌத் இந்தியன் டீச்சர், பாலர் கல்வி போன்ற சங்கப் பத்திரிகைகளை அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறவேண்டுமென்றும் பரோபகார நிதியில் (Benevolent Fund) அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் அடைய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஊக்கம் தந்த உயர்வு

ஃபிரடெரிக் ரஸ்ஸல் காப்பெல் மின்ன சோட்டா பல்கலைக்கழகத்தின் மின்விசைப் பொறியியல் பட்டதாரி. 1942-ல் பட்டம் பெற்றதும் அவர், அமெரிக்க டெலிஃபோன்-டெலிகிராஃப் கம்பெனியில் (ஏ.டி-டி-டி) கம்பக் குழிதோண்டும் வேலையில் சேர்ந்தார். இன்று அவர், அந்த மிகப் பெரிய நிறுவனத்தின் டைரக்டர்கள் குழுத் தலைவராகவும், தலைமை நிர்வாகியாகவும் இருக்கிறார்.

சிறு நகர் ஒன்றில் பிறந்து வளர்ந்தவர் காப்பெல். தனது கல்விச் செலவுக்குப் பணம் வேண்டிப் பல்வேறு வேலைகளைச் செய்தார். அந்த அனுபவத்தின் மூலம் அவருக்கு உறுதி, பொறுப்பு உணர்ச்சி, உழைப்பின் உயர்வு ஆகிய நற்பண்புகள் கிட்டின. அச்சிறந்த பண்புகளே, அவரை, ஏ. டி.-டி. நிறுவனத்தின் தலைமைப் பதவிக்கு உயர்த்தின. இந்த நிறுவனம், பெல் டெலிஃபோன் கம்பெனியைச் சேர்ந்தது.

பெரும் புள்ளி

இளைஞர் காப்பெல் ஏ. டி.-டியின் கடை ஊழியர் நிலையில் நீண்ட நாள் இருக்க வில்லை. அவருடைய நிர்வாகத் திறமை அவருக்கு அடிக்கடி பதவி உயர்வுகளை அளித்தது. 1954-ல் அவர், நாட்டின் வர்த்தக வட்டாரத்தில் ஒரு பெரும் புள்ளியானார். அந்த ஆண்டில் வெஸ்டர்ன் எலக்டிரிக் கம்பெனியின் தலைவர் பதவி அவருக்குக் கிடைத்தது. இக்கம்பெனி, பெல் கம்பெனியின் தயாரிப்பு விநியோகத் துறை நிறுவனமாகும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் காப்பெல், ஏ. டி.-டியின் தலைவராகவும், தலைமை நிர்வாகியாகவும் பதவியேற்றார்.

வாட்டசாட்டமானவர் காப்பெல்; நட்புக்கு உறைவிடமானவர். ஆற்றல் மிகுந்தவர், நம்பிக்கை ஊட்டுபவர். வேலையில் ஆர்வமுள்ள ஒரு நேர்மையான நிர்வாகி என்பதை அந்தக் கம்பெனியில் எல்லோரும் அறிவர். அண்மையில் ஒரு பெரிய நிறுவனத்தை நடத்தும் தத்துவம் பற்றி அவர் பின்வருமாறு கூறினார். "இதுபோன்ற மிகப் பெரிதும் பலதரப்பட்டதுமான ஒரு தொழில் முயற்சியில் எல்லா விஷயங்களையும் எந்த ஒரு நபரும் தெரிந்திருக்க முடியாது—நிச்சயமாக எனக்குத் தெரியாது—நாம் பலரும் ஒன்றாய் இணைந்து செயல்படுவதின் மூலம் நம்முன் தோன்றும் பிரச்னைகளுக்கு நல்ல பரிகாரம் காணலாம். பரிகாரம், உழைப்பாளிகளின் படைப்புத் திறனுடன் கூடிய ஒத்துழைப்பைப் பொறுத்தது. அந்தச் சூழ்நிலையை வளர்ப்பதே எனது வேலை". 1956-ல் தலைமை நிர்வாகியாகப் பணி மேற்கொண்ட பின்னர் அவருடைய தலைமையில் நிறுவனம் அளவுகடந்த வளர்ச்சி அடைந்துள்ளது. வெஸ்டர்ன் எலக்டிரிக் கம்பெனி மற்றும் 23 டெலிஃபோன் கம்பெனிகளும் நாடு முழுவதிலும் அமையப் பெற்றுள்ளன. இவற்றுடன், உலகிலேயே மிகப் பெரிய தொழில் ஆராய்ச்சி-வளர்ச்சி நிலையங்களில் ஒன்றான பெல் டெலிஃபோன் ஆய்வுக் கூடமும் நிறுவப்பட்டது. பெல் கம்பெனிக்கு ஏறத்தாழ 2 கோடி 20 லட்சம் புதிய வாடிக்கைக்காரர்களை அவர் சேர்த்தார். அமெரிக்காவில் மொத்தம் 8 கோடி 85 லட்சம் டெலிஃபோன்கள் இருக்கின்றன. அவற்றில் 7 கோடி 20 லட்சம், பெல் கம்பெனியைச் சேர்ந்தவை. வளர்ச்சிக்காக 1,500 கோடி டாலர் முதலீட்டுக்கு அவர் வகை செய்தார். கம்பெனியின் இயந்திரங்களுக்கான முதலீடு 1956-ல் 1,700 கோடி டாலராக இருந்தது. அதை

இன்று 3,200 கோடி டாலர்களாக அவர் பெருக்கியுள்ளார்.

உலகத்திலேயே மிகப் பெரிதும் திறமையுடன் பணியாற்றி வருவதுமான இந்த டெலிஃபோன் கம்பெனியில் சுமார் 600,000 ஊழியர்கள் பணி புரிகின்றனர். 1964-ல் தினந்தோறும் சுமார் 25 கோடி உள்ளூர் டெலிஃபோன் அழைப்புகளும் ஒரு கோடி 20 லட்சம் தொலைதூர டெலிஃபோன் அழைப்புகளும் 63,77,000 கடல் கடந்த டெலிஃபோன் பேச்சுகளும் இக்கம்பெனியின் டெலிஃபோன் வசதி மூலம் நடந்துள்ளன. அவ்வாண்டு மொத்த வருமானம் 1,000 கோடி டாலர்.

இதற்கு மேலாக, சர்வதேசத் தகவல் போக்குவரத்தில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்தியதற்குக் காப்பல் ஏற்றபெறும் பொறுப்புதான் காரணம், இன்று அமெரிக்காவை உலகின் பிற்பகுதிகளுடன் இணைக்கும் 905 டெலிஃபோன் அமைப்புகள் பெல் கம்பெனியில் உள்ளன. உலக நாடுகள் பரஸ்பரம் சார்ந்திருப்பது மேலும் மேலும் அதிகரித்து வருகின்றது. எனவே டெலிஃபோன் அமைப்புகளும் அதிகரித்து வருகின்றன. 1980-ம் ஆண்டளவில் 10,000 கடல் கடந்த டெலிஃபோன் அமைப்புகள் தேவைப்படுமென்று காப்பெல் மதிப்பிடுகிறார்.

டெலிவிஷன்

எதிர்காலச் சர்வதேசத் தகவல் போக்குவரத்தில் உலகமளாவிய டெலிவிஷன் ஒலி பரப்பும் இன்னும் சில ஆண்டுகளில் சாத்தியமாகிவிடுமென்று ஏ. டி.-டி தலைவர் குறிப்பிடுகிறார். "வளர்ந்து வரும் புது நாடுகளின் கல்வி முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துவது இதன் மாபெரும் பயன்களில் ஒன்றாக இருக்கும்" என்று அவர் சொல்கிறார். "நியூ யார்க்கில் நடைபெறும் ஒரு அறுவை சிகிச்சையைக் காங்கோவிலுள்ள மருத்துவ மாணவர்கள் டெலிவிஷன் மூலம் பார்த்துப் படிக்க மாட்டார்கள் என்று யார் சொல்ல முடியும்" என்று கேட்கிறார் அவர்.

ஒரு பெரிய தொழில் நிறுவனத்தில் பணியாற்றும் போதுதான், ஒருவருடைய வாழ்க்கையில் மிகப் பெரிய அறைகூவல்கள் தோன்றுகின்றன, என்று அவர் திடமாய் நம்புகிறார், அதுபற்றி அவர் சொல்வதாவது.. "ஒரு நிர்வாகி தன் வேலையைக் கருத்துடன் செய்ய வேண்டும். தவறுகள் நேர்வதில் அஞ்சக்கூடாது; எல்லாவிதமான தவறுகளையும் நான் செய்துள்ளேன். ஒருபோதும் தவறே செய்யாதவர் எதுவுமே செய்யமாட்டார். எனினும் ஒருவர் செய்வதில் பாதிக்கு மேல் சரியானவற்றையே செய்யவேண்டும்."

1902 ஜனவரி 14-ம் தேதி மின்னசோட்டாவைச் சேர்ந்த அல்பர்ட் லீயி என்ற நகரில் அவர் பிறந்தார். தந்தை ஃபிரெட் ஆல்பெர்ட் காப்பெல். அன்னை கெர்ட்ரூட். அவருடைய தந்தையார் இப்பொழுது அந்த நகரில் ஓய்வு பெற்று வருகிறார். பள்ளியில் படிக்கும்போது, வகுப்புகளுக்குச் செல்வதற்கும் பணந் தேடும் வேலைகளுக்குப் போவதற்குமே ஃபிரட்டுக்கு நேரம் சரியாக இருந்தது எனினும்தான் சொந்தமாகக் கண்டு பிடித்த 'ஹாம்' ரேடியோவை அபிவிருத்தி செய்வதற்கும் அவர் அவகாசம் தேடிக் கொண்டார், மின் பொறிஇயல் நிபுணராக வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டியது இந்த ரேடியோ அனுபவந்தான் என்று அவர் கூறுகிறார்.

மின்னசோட்டா பல்கலைக் கழகத்தில் படிப்பிலும், சமூக நலப்பணி வட்டாரங்களிலும் அவர் முன்னணியிலேயே விளங்கினார். அப்பொழுது தன் செலவுக்கு வேண்டிய பணத்தை, பல்கலைக்கழக

விழாக்களின்போது நடைபெறும் நடன வாத்திய கோஷ்டியில் மத்தளம் வாசிப்பது, விருந்து உபசரிப்பில் கலந்து கொள்வது போன்ற வேலைகளைச் செய்வதுமூலம் ஈட்டினார். இப்பணிகள் அவருக்குப் பல பெரிய மனிதர்களுடன் பழகும் வாய்ப்பை அளித்தன. பலருடன் பழகவும், அவர்களுடைய கருத்துக்களைப் பாராட்டி மேற்கொள்ளவும் வேண்டிய வழிகளை அந்த அனுபவங்கள் காட்டின என்று அவர் உணர்கிறார்.

வாணிபத் துறையில் காப்பெல் பெற்றுள்ள அமோக அனுபவங்களை அங்கீகரிக்கும் வாயிலாக மின்னசோட்டா பல்கலைக் கழகம் தனது 1954-ம் ஆண்டின் 'அமோக சாதனைக்' குரிய பரிசை அவருக்கு வழங்கியது. இது அவர் பட்டம் பெற்ற 30 ஆண்டுகளுக்குப் பின் நடந்த நிகழ்ச்சியாகும். மற்றும் பல பல்கலைக்கழகங்கள் அவருக்கு ஏராளமான கவுரவப் பட்டங்களை வழங்கியுள்ளன.

1927-ல் அவர், ரூத் கரோலின் என்பாரை மணஞ் செய்து கொண்டார். அவர்களுக்கு இரு புதல்விகள் உள்ளனர். இருவருக்கும் மணமாகியுள்ளது.

நியூ யார்க் நகரின் வெளியே பிரான்ஸ்வில் என்றவிடத்தில் கெப்பெல் தமது மனைவியுடன் வசிக்கிறார். பெல் கம்பெனியில் தன் வேலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அங்கு வாரத்துக்கு 25 டாலர் சம்பளம் தந்த அவருடைய முதலாவது அலுவலைப் பற்றிக் குறிப்பிடுவார். 'கம்பங்களை நடுவதைப் பார்க்கிலும் அதிக வேகமாக குழிகளைத் தோண்டிக்கொண்டு போவதான் எங்களுடைய முக்கிய வேலை" என்று அவர் கூறுவார். "அதற்கு முன்னாலோ அல்லது அம்மாதிரி வேடிக்கையை நான் அனுபவித்ததில்லை. விந்தையான சகாக்களுடன் செய்ய வேண்டிய கடினமான வேலை அது"

சர்ச்சிலின் பிரசங்கம்

எம். எஸ். அருள்சாமி, நாட்டரசன் கோட்டை

யுத்த காலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்தவர் திரு. சர்ச்சில் துரை. அவர் ஒரு சமயம் ரேடியோவில் பேசுவதற்காக டாக்ஸியில் ஏறிக்கொண்டு ரேடியோ ஸ்டேஷனுக்குச் சென்றார். அந்த டாக்ஸி டிரைவருக்கு சர்ச்சில் என்ற பெயர் நன்றாகத் தெரியும். அவர் அபாரமாகப் பேசுவார் என்பதும் தெரியும். ஆனால் அவரை நேரில் பார்த்ததில்லை. ஆகையால் தன் காரில் ஏறி வருகிறவர் சர்ச்சில் துரைதான் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

டாக்ஸி ரேடியோ ஸ்டேஷனுக்கு முன்னால் போய் நின்றது. சர்ச்சில் உடனே கீழே இறங்கிக்கொண்டு நான் அரைமணி நேரத்தில் திரும்பி வந்துவிடுவேன். அதுவரை காத்திருப்பாயா? என்று கேட்டார். "முடியாது ஸார், இன்றைக்கு சர்ச்சில் ரேடியோவில் பேசப்போகிறார். நான் அதைக் கேட்கப் போக வேண்டும்" என்றான், டிரைவர்.

சர்ச்சிலுக்கு இதைக் கேட்டதும் ஆச்சரியமாக இருந்தது. அவனைச் சோதனை செய்ய எண்ணினார். ஏனப்பா, உனக்கு டாக்ஸி வாடகையுடன் ஒரு பவுன் கூடத் தந்தால் நிற்பாயா? என்று கேட்டார்.

அப்படியா! சரி, நிற்கிறேன். அந்தச் சர்ச்சில் என்னத்தைப் பேசிக் கிழிக்கப் போகிறான்? என்றான் அந்த டிரைவர் அலட்சியமாக.

உயிர் காக்கும் பணியாற்றும் "கருணைப் பறவை"

அமெரிக்க விமானி ஒருவர் காட்டு நிலத்திலே தன்னந்தனியாக என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டு நிற்கிறார். கீழே அவர் தமது பாரசூட் குடையை விரித்து வைத்து வானை நோக்கிக் கைகளை அசைக்கிறார்; தவிக்கிறார்.

வானில் ஒரு விமானம் வந்தது; தாழ்வாகப் பறந்தது. ஒரு மூட்டையைக் கீழே போட்டுவிட்டுச் சென்றது.

விமானி நன்றியுணர்வுடன் மூட்டையை எடுக்கிறார்; பிரிக்கிறார்; ஒரு உடுப்பு, ஒரு நைலான் கயிறு, ஒரு பிளாஸ்டிக் பலூன், அழுத்தத்தில் ஹீலியம் வாயு அடைக்கபபெற்ற பல புட்டிகள் முதலியன இந்த மூட்டையில் இருக்கக் கண்டார்.

விமானி முதலில் உடுப்பைப் போட்டுக்கொண்டார். பலூனை அதன் முழு அளவுக்கு 24 - அடி நீளம் 6 அடி விட்டம்—உப்புவதற்கு ஹீலியம் புட்டிகளைப் பயன்படுத்தினார். பலூன் நேரே 500 அடி உயரம் கிளம்பியது. பலூன் அவருடைய உடுப்புடன் நைலான் கயிற்றால் பொருத்தப்பட்டிருந்தது.

சில நிமிடம் கழித்து விமானம் திரும்பி வந்தது; எதிர் காற்றுக்குள் பறந்து வந்ததால் அதன் வேகம் குறைந்திருந்தது; மீட்க வேண்டிய விமானியின் புவி ஈர்ப்புச் சக்தியும் குறைந்தது. பறக்கும் பலூனுக்குக் கீழே தொங்கிக்கொண்டிருந்த நைலான் கயிறு, விமானத்தின் மூக்கிலிருந்து வெளியே ஆங்கில எழுத்து 'V' மாதிரி நீட்டிக்கொண்டிருந்த இரு அலுமினியக் கலவைக் கம்பிகளுக்கிடையே புகும் வண்ணம் விமானம் பறந்தது. கம்பி ஒவ்வொன்றும் 18 அடி நீளமுள்ளது. இவ்வாறு நைலான் கயிறு இவ்விரண்டு கம்பிகளுக்கிடையே மாட்டிக்கொண்டதும் அது நழுவி விடாமல் தடுக்கத் தாழ்ப்பாள் அமைப்பு ஒன்று பூட்டிக்கொண்டது. விமானத்துக்குப் பின்புறம் நைலான் கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தார் விமானி.

இப்பொழுது விமானத்தின் பின்புறத்தில் திறந்த கதவு ஒன்று வழியாக வேலை செய்துவந்த விமான ஊழியர்கள் விமானத்துக்குப பின்னால் காணப்பெற்ற நைலான் கயிற்றைக் கொக்கி கொண்டு பிடித்து இழுத்து ஒரு சக்கரத்தில் மாட்டிச் சுழற்றினர். விமானி பத்திரமாக விமானத்துக்குள் வந்ததும் கத்தரிக்கோல் போன்ற ஒரு கருவி நைலான் கயிற்றைத் துண்டித்துவிட, பலூன் விடுபட்டுப் போயிற்று. சொல்வதற்கு இவ்வளவு நேரமாகிறது. ஆனால் ஐந்தே நிமிடத்தில் மீட்பு வேலை முடிந்து விட்டது.

77½ டன் எடையுள்ளது இந்த விமானம். பெரிய தட்டாரப்பூச்சி போன்றது. "மெர்ஸி பெர்ட்ஸ்" என்ற புதிய எச்ஸி-130 எச் ஹெர்க்குலிஸ் விமானங்களில் இது முதலாவது. இவ்வாண்டுக் கோடையில் யு. எஸ். விமானப்படை, இரவு பகல் உலகம் முழுவதிலும் இதைப் பயன்படுத்தப் போகிறது.

20 கோடி டாலர் திட்டத்தின்கீழ், இதுமாதிரி 60 விமானங்களை லாக்ஹீடு - ஜார்ஜியா கம்பெனி கட்டி வருகிறது. ராணுவ விமானப் போக்குவரத்துப் பிரிவின் ஒரு பகுதியான விமான மீட்புப பணிக்காக (ஏ. ஆர். எஸ்.) இவை கட்டப்பட்டு வருகின்றன. ஜார்ஜியாவில் மாரியெட்டாவில் இருக்கிறது இந்தக் கம்பெனி. 1967 துவக்கத்தில் இந்த எச்ஸி-130 எச், விமானங்கள் ஏ. ஆர். எஸ். - ஸின் முதுகெலும்பாக இருக்கப் போகின்றன. உலகம் நெடுகிலும் 71 தளங்களிலிருந்து ஏ. ஆர். எஸ். பணியாற்றுகிறது. விமானப்படை, நாஸா என்ற விமான இயல் விண்வெளி நிர்வாகம், பாதுகாபபு இலாகா ஆகியவற்றின் வான வெளி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கக் கூடிய முன்னேற்றமிக்க விமானம் என்று இந்த விமானம் வருணிக்கப்படுகிறது; மெர்ஸி பெர்டு அல்லது கருணைப் பறவை.

நாஸாவின் ஜெமினி, அப்பாலோ விண்வெளித் திட்டங்களிலும், விண்வெளி கப்பல்களிலிருந்து போடப்படும் மூட்டைகளை மீட்கும் பணிகளிலும் ஹெர்க்குலிஸ் விமானங்களுக்கு முக்கியப் பங்குண்டு.

ஜெமினி, அப்பாலோ விண்வெளி விமானிகள், மீட்புப் படைகளால் எட்டமுடியாத, வெகு தொலைவில் உள்ள மூலை முடுக்குப பிரதேசங்களில் இறங்க நேர்ந்தால், "மெர்ஸி பெர்டுகள்," அந்த விண்வெளி விமானிகளைக் கண்டுபிடித்து மீட்டு வரும் பணியை ஏற்றுக்கொள்ளும்.

இந்த எச்ஸி - 130 எச் விமானத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் பின்வருமாறு என விமானப படை அதிகாரிகள் சுட்டிக் காட்டினர். பல பணிகள் புரியும் மின் அணுக் கருவிகளும், தகவல் போக்குவரத்துப பொறியும் (2) பூமியில் எந்த இடத்திலிருந்தும் 500 ராத்தல் எடையுள்ள நபர்கள், பொருள்களை மீட்கும் அதன் ஒப்பற்ற மீட்பு சாதனங்கள் (3) விண்வெளியிலிருந்து மிக வேகமாக பூமியின் வாயு மண்டலத்துக்குள் பிரவேசிக்கும் விண்வெளிக் கப்பல் அடைந்துள்ள இடத்தைத் துல்லியமாக சொல்லும் அதன் கண்காணிபபுக் கருவி.

'மெர்ஸி பெர்டு' விமானத்தில் தானே இயங்கும் ஒளிவீச்சுக் கருவி இருக்கிறது. இரவுக் காலத்தில் தேடும், மீட்கும் பணிகளுக்கும் போதிய வெளிச்சம் பெற விமானிகள் இக்கருவியைப் பயன்படுத்துவார்கள். ★

கல்வி எதிரொலி

(EDUCATION ECHO)

தமிழாக்கம்: **ஆ. குப்புச்சாமி**

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு World Confederation of Organisations of the Teaching Profession)

எகிப்தில் கல்வி முன்னேற்றம்

எகிப்தின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உயர்தரக் கல்வி முன்னேற்றத்திற்குப் 15-மிலியன் எகிப்தியப் பவுண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால் உயர்தர நிறுவனங்களில் படித்து வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 4,050-லிருந்து 12,000-த்திற்கு மேல் உயரும்.

இத்திட்டப்படி 18-உயர்தரக் கல்வி நிறுவனங்கள் நிறுவப்படும். 3 வாணிக இயல் நிறுவனங்களும் 3-விவசாய நிறுவனங்களும் 3-தொழிலியல் நிறுவனங்களும் இப்பதினெட்டு 18-நிறுவனங்களுள் அடங்கும்.

இந்நிறுவனங்கள் மின்னணுவியல், தாதுப்பொருள்கள், மின்சாரம், கப்பல் கட்டுதல், உணவு, நெசவு சரக்கு முதலியனவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லுதல் ஆகிய துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும்.

ஜோர்டானில் கல்வி முன்னேற்றம்

கல்வி, கற்பிக்கும் முறை, அறிவியல், இலக்கியம், கலைகள் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோர்க்குப் பதக்கங்கள் வழங்குவதென ஜோர்டான் கல்வி அமைச்

மேன்மை தங்கிய, முடிக்குரிய இளவரசர் அஸ்ஃபா வெஸ்ஸென் ஹைலி சலாசி அவர்கள், கொண்டாட்ட மாளிகையில் தந்த வரவேற்பிற்போது, சர் ரோனல்ட் கோல்ட் அவர்கள், செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினர்களான திருமதி F. R. பூபாலன் அவர்களையும், ராபர்ட் மைக்கேல் அவர்களையும் இளவரசர்க்கு அறிமுகப்படுத்துகிறார்.

சகம் முடிவுசெய்துளது. அமைச்சர் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயல் படுத்தப் படவேண்டிய இம்முடிவுப்படி ஒவ்வோராண்டும் நூறு பதக்கங்கள் ஜோர் டானியர்களுக்கு வழங்கப்படும்.

யுனெஸ்கோ தூதன்-ஜுலை, ஆகஸ்ட் வெளியீடு

யுனெஸ்கோ தூதன் என்ற ஏட்டின் ஜுலை—ஆகஸ்ட் வெளியீட்டின் பொருள் நோக்கமுடைய இளைஞர் என்பதாகும். அவ்வேட்டில் உலகமக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் 25-வயதிற்குக் குறைந்தவர்கள் என்று குறிக்கப் பட்டிருக்கிறது.

வளரும் நாடுகளில் 5-வயதிலிருந்து 24-வயது வரையுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 900-மிலியன்களாகும். இவர்களுக்கு வழங்கப்படும் பொது அடிப் படைக் கல்வி சிறந்ததாக இருக்கவேண்டும் என்று மேற்குறித்த ஏட்டில் வெளி வந்துள்ள கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

"எதிர்காலச் சமுதாயங்களில் எல்லா இளைஞர்களையும் ஒன்று சேர்த்திடப்



மதிப்பிற்குரிய கல்வியமைச்சர் ஆடோகெப்ரி மெஸ்கெல் கிப்லி எக்சி அவர்கள், மேன்மை தங்கிய மன்னர் முதலாம் ஹைலி சலாசி அவர்களின் நல்வரவேற்புச் செய்தியைப் படிக்கிறார்.

புதிய கல்வி அமைப்புக்கள் தேவைப்படுகின்றன" என்று யுனெஸ்கோ தலைமை இயக்குநர் ரினே மாஹ்யூ எழுதுகிறார்.

இவ்வெளியீட்டில் கல்வியாராய்ச்சி, உலகெங்கணும் வாழும் இளைஞர்கள், தாமே முன்வந்து செய்த செயல்கள் ஆகியவை தொடர்பான கட்டுரைகள் வெளியிடப் பட்டுள்ளன.

யுனெஸ்கோ தூதனைப்பற்றி (The Unesco Courier) மேலும் தெரிந்துகொள்ள விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

Unesco,
Place de Fontenoy,
Paris 7e, France.



ஆப்பிரிக்கக் கூடத்தின் முன் பேராட்கள் கூடுகின்றனர்

லாரன்ஸ்சியாவின் அறிக்கை

சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்ததும், சிங்கப்பூர் ஆசிரியச் சங்கம், "எல்லா ஆசிரியர்களும், புதிதாக நிறுவப்பட்டுள்ள சிங்கப்பூர் என்ற நாட்டிற்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும், ஆதரவு அளிப்பவர்களாகவும் இருக்கவேண்டும்." என்று கேட்டுக் கொண்டது.

சிங்கப்பூர் ஆசிரியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் லாரன்ஸ் சியா ஓர் அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கையில் அவர், "நேர்மை, தன்னுரிமை ஆகிய அடிப்படையின் மேல் எழுப்பப்பட்டுள்ள, செழுமை, அமைதி, முன்னேற்றம் மிக்க நாட்டினை உருவாக்க, ஆசிரியர்கள் நாட்டின் தலைவர்களுடனும், மற்றைய குடிமக்களுடனும் ஒத்துழைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

"சிங்கப்பூர், மலேயா, சாபா, சாரவாக் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் ஏற்ற காலத்தில், வரலாற்றால் ஒன்றுபடுத்தப்படவேண்டும் என்பது நமது நம்பிக்கையாகும். ஆதலால், இப்பகுதிகளில் வாழும் ஆசிரியர்கள், எதிர்காலச் சூழ்நிலை எதுவாக இருந்தாலும், மாணவர்களின் உள்ளங்களில் சகோதரத்துவ உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்." இவ்வாறு அவ்வறிக்கை முடிவடைகிறது.

ஸ்ரீ நகரில் கல்வி மாநாடு

அனைத்திந்தியக் கல்விச் சங்கங்களின் கூட்டிணைப்பு ஜூன் மாதத்தில் காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீ நகரில் ஒரு சிறப்புக் கல்வி மாநாட்டைக் கூட்டியது. அம்மாநாட்டில் மாநில ஆசிரியர்களின் அமைப்புகளிலிருந்து சென்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். குறைந்தபட்ச தேசிய ஆசிரியச் சம்பள அளவு ஒன்று ஏற்படுத்தப் படவேண்டும் என்று அம்மாநாடு தீர்மானித்தது.

முதுமைக் கால நன்மைகள், சேவை நிலைமைகள், கல்வி மூலம் தேசிய ஒருமைப்



'விக்டாப்பின்' புதிய செயற்குழு உறுப்பினர்கள் ஆப்பிரிக்கக் கூடத்தின் படிகளில் நிற்கின்றனர்.

இடமிருந்து வலம் கீழ் வரிசை: 1. ஓல்மான் சோடோ கோன்சாலஸ், கோஸ்டாரிகா; 2. டாக்டர் வில்லியம் G. கார், தலைமைச் செயலாளர்; 3. சர். ரோனல்ட் கோல்ட், இங்கிலாந்து, தலைவர்; 4. S. நடராசன், இந்தியா, துணைத்தலைவர்; 5. தய்-சி-சுங், கொரியா. இரண்டாம் வரிசை: 1. ஸ்டீபன் கியோனி, கென்யா; 2. திருமதி சாரா C. கால்டுவெல், அமெரிக்கா; 3. திருமதி F. R. பூபாலன், மலேயா; 4. ரியாம்கி அடிகோ, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், ஐவரி கோஸ்ட்; 5. ஈரிக் பிஸ்டர், ஜெர்மனி. மேல் வரிசை: 1. ராபர்ட் மைல்கேல், IFTA; 2. பியரி தேஸ்வாலாய்ஸ், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், பிரான்சு; 3. A. W. S. ஹட்சிங்ஸ், FIPESO; 4. எல்சாயத் அலி முகம்மது, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், ஐக்கிய அரபுக் குடியரசு.

நிறை பெருங்கூட்டத்திற் பேராட்கள்

கல்வி, அருங்கலைகள் அமைச்சகத்தால், 'விக்டாப்' பேராட்கள் கண்டுகளிக்க அளிக்கப் பட்ட ஒரு கலை நிகழ்ச்சி.

பாடு, ஆசிரியர்கட்குக் கல்வி ஆகிய பலவற்றைப்பற்றி அச்சிறப்பு மாநாடு பரிசீலனை செய்தது.

எதிர்காலத்தில்.........

"கல்வித் திட்டத்தில் ஆசிரியச் சங்கங்களின் பங்கு" என்ற 1966-ஆம் ஆண்டுக் கான பொருள்பற்றிய முன்னுரை வழங்கும்போது, 'விக்டாப்' தலைமைச் செயலாளர் வில்லியம் G. கார் அவர்கள், கல்வி ஒரு நாட்டின் முக்கியத் தொழில்களுள் ஒன்றாகை யால், அதற்குத் தேசியத் திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும் என்று ஆடிஸ் அபாபா கூட்டத்திற்கு வந்திருந்த பேராட்களை நோக்கிக்கூறினர்.

1966-ஆம் ஆண்டுப் பேராள் கூட்டம் ஆகஸ்டுத் திங்களில், கொரியாவிலுள்ள சியோலில் நடைபெறும். 1968-ஆம் ஆண்டுப் பேராள் கூட்டம் அயர்லாந்தின் தலை நகரான டப்ளினில் நடைபெறும் என்று ஆடிஸ் அபாபா கூட்டத்தில் அறிவிக்கப் பட்டது.

1967-ஆம் ஆண்டுப் பேராள் கூட்டம் கனடாவிலுள்ள வான்கூவரில் நடத்தப் படும். அக்கூட்டத்தின் பொருள், "ஆசிரியச் சங்கங்களின் தொழில் தொடர்பான பொறுப்புக்கள்" என்பதாகும்.

அத்தலைப்பு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை:

(1) சமுதாயத்துக்குத் தொழில் தொடர்பான பொறுப்புக்கள்.

(2) தங்கள் உறுப்பினர்களுக்குத் தொழில் தொடர்பான பொறுப்புக்கள்.

(3) உலக மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள உதவும் தொழில் தொடர் பான பொறுப்புக்கள் என்பன.

1966-ஆம் ஆண்டின் பொருள்பற்றிப் பேசுகையில் டாக்டர் கார் பேராட்களை நோக்கி, "உண்மையாகப் போடப்படும் திட்டத்தின் ஒரு பகுதி கல்வியாகும். அத் திட்டம் தனிப்பட்டோர் திட்டமாகவோ, குடும்பத் திட்டமாகவோ, தேசியத் திட்ட மாகவோ இருக்கலாம்." என்றார்.

"மிகமிக முன்னேறியுள்ள நாடுகளைத் தவிர மற்றநாடுகளால், என்னதான் வெளிநாட்டு உதவி பெற்றபோதிலும், தங்கள் மக்கள் விரும்பும் எல்லாவகையான கல்வியை வழங்க முடியாது. ஆகையால், கல்வி சம்பந்தமாகத் திட்டமிடுதல் தவிர்க்க முடியாததாகிறது." என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடுகளில், தொழில் திறமிலா தொழிலாளர்களின் விகித அளவு கடந்த 50-ஆண்டுகளில் பாதியளவுக்குக் குறைந்துளது என்று டாக்டர் கார் கல்வியில் முதலீடு செய்தலின் பொருளாதார அமிசங்கள் பற்றிப் பேசுகையில் கூறினர். "ஒவ்வொரு நாளும் கல்லாதவர்களுக்கு வழங்கும் வேலைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது." என்றும் அவர் கூறினர்.

"கல்வியில் முதலீடு செய்க என்பது ஒரு வெறும் முழக்கமன்று என்பதை அரசுகள் புரிந்துகொள்ள வேண்டும். அது பெரு முக்கியத்துவம் வழங்கப்பட

கொரியக் கல்வியமைப்புக்களின் கூட்டிணைப் பின் (Koream Federation of Education Associations) ஆதரவின் கீழ், கொரிய ஆசிரியர்கள்—ஏறத்தாழ 300 பேர்கள் ஆசிரியர்களின் நலத்தை உயர்த்த வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தச் சியோலில் கூடியுள்ளதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரமாவது உறுதிசெய்யப்பட வேண்டும், 1966-ஆம் ஆண்டிற்குள் ஒரே தகுதியுடைய ஆசிரியர்கள் எந்த வகுப்பிற்குக் கல்வி கற்பித்தாலும் அவர்களுக்கு ஒரே சீரான ஊதியம் வழங்கப்பட வேண்டும், ஆராய்ச்சி உதவித் தொகையை 500-வன்களிலிருந்து 2000-வன்கள் வரை உயர்த்த வேண்டும் என்பனவே அவர்தம் கோரிக்கைகள்.

KFEA.யின் தலைவர் டாக்டர் சின்-ஒயு, "நாளைய குடிமக்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரம் அரசால் உறுதி செய்யப்பட வேண்டும்" என்று ஆசிரியர்களை நோக்கிக் கூறினர்.

கொரியாவின் குடியரசுத் தலைவர்-சங்-ஹீ லார்க்கிற்கும், தேசியச் சட்ட சபையின்சபா நாயகர் ஹீரீயாசாய் ரீக்கும் ஆசிரியர்கள் ஒரு செய்தி அனுப்பினர். அச்செய்தியில் ஆசிரியர்கள் உள்ளம் தளர்ந்திருக்கின்றனர் என்றும், பொருளாதாரத் தொல்லையே, ஆசிரியர்கள், தங்கள் தொழிலை விட்டுச் செல்லக் காரணம்என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

சியேலில் நடக்கும் கூட்டத்தில், 7000-ஆசிரியர்கள் பங்குகொள்ள வேண்டும் என்பது தான் திட்டம், எனினும், பள்ளிக்கூட்டம் நடக்கும் போது ஆசிரியர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று கல்வியமைச்சகம் தடை விதித்துவிட்டது.

வேண்டிய பொருளாதாரக் கொள்கையாகும்.'' என்றவர் தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

"கல்வித் திட்டத்திற்கும் திட்டத்தின் மற்ற அம்சங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பின்மீது ஆசிரிய அமைப்புக்களின் கவனம் செல்லுதல் வேண்டும்'' என்றார் டாக்டர் கார்.

இதனை எப்படி நன்ருகச் செய்தல்வேண்டும் என்பதனை நாம் தெரிந்துகொள்ள வேண்டும், 1966-ஆம் ஆண்டுக்கான பொருள்பற்றிய முன்னுரை இதுவே. "எனக் கூறித் தமதுரையை டாக்டர் கார் முடித்துக்கொண்டார்.

டாக்டர் கார் அவர்களின் முழுப்பேச்சு கல்வித் திறைகாட்சி (Education Panorama) மலர் 7, இதழ் 4-ல் வெளியிடப்படும்.



தலைமையலுவலகம் தய் (Thai) மொழியிலும், ஜெர்மன் புதிதாக வெளியிடப்பட்டுள்ள கல்வி எதிரொலிப் பத்திரிக்கையின் படங்களே மேலேயுள்ளவை. இப்போது 13 வெவ்வேறு மொழிகளில் கல்வி எதிரொலி வெளியிடப்படுகிறது.

இப்பத்திரிகை தய் மொழியில் பாங்காக்கைச் சேர்ந்த தானூ சுவேயங்சாக்டி என்பவராலும், ஜெர்மன் மொழியில் பிராங்க்பர்ட்டைச் சேர்ந்த E. வால்ஸ் என்பவராலும் மொழி பெயர்க்கப்படுகிறது. அக்டோபர்த் திங்கள் இடையிலிருந்து 'விக்டாப்' செயலகம் கீழ்க்கண்ட புதிய முகவரியில் இயங்கி வரும்.

1330, மாசாசூசெட்ஸ் அவென்யூ N.W., வாஷிங்டன், D.C. 20005 U.S.A.

ஐக்கிய அரபுக் குடியரசைச் சேர்ந்த அலக்சாண்டிரியா பல்கலைக் கழகத்திலுள்ள கலைத்துறைக் கட்டடத்தில் ஆகஸ்ட் 14-ஆம் தேதியிலிருந்து 22-ஆம் தேதி வரை, அராபிய ஆசிரியர் சங்கங்களின் கூட்டிணைப்பின் (Federation of Arab Teacher's Syndicates) கூட்டத்திற்கு ஏறத்தாழ 700—ஆசிரியர்கள் வந்திருந்தனர். அக்கூட்டத்தின் முக்கிய நோக்கமே பள்ளிகளில் விஞ்ஞானம் கற்பித்தல் என்பதாகும்.

ஈராக், குவெய்ட், லெபனன், மாரிடேனியா, பாலஸ்தீனம், சூடான், சிரியா, ஏமன் ஆகிய நாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் அக்கூட்டத்திற் கலந்து கொண்டனர். 'விக்டாப்பின்' தலைமைச் செயலானரும், திருமதி வில்லியம் ஜி. காரும் செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினரும், அமெரிக்காவைச் சேர்ந்தவருமான திருமதி சாரா கால்டுவெலும், 'விக்டாப்' பாரீஸ் அலுவலகத்தின் இயக்குநர் வில்ஹெல்ம் ஈபர்ட்டும் 'விக்டாப்பின்' சார்பில் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

20-மிலியன் டாலர்கள்

உலகப் பொருளகத்தின் (World Bank) கிளைநிலையமான பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் (The International Development Association) 20, மிலியன் டாலர்களைக் கடனாக நைஜீரியாக் குடியரசிற்குக் கொடுத்துள்ளது. இப்பணம் இடைத்தரத் தொழில் நுணுக்க, ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் கட்டுதற்கும், விரிவு படுத்துதற்கும், துணைப்பொருள்கள் வாங்கிப் போடுதற்கும் பயன்படுத்தப்படும்.

பள்ளிகளை விரிவு படுத்துவதாலும் கட்டுவதாலும் மாணவர்களின் எண்ணிக்கை 11,000-மாக உயரும்: இடைத்தரப் பள்ளிகளின் எண்ணிக்கை 700-ஆக உயரும்; தொழிற்பள்ளிகளின் எண்ணிக்கை 5,000-மாக உயரும். இவ்விருபது மிலியன் டாலர் கடன், இதுவரைக்கும் பன்னாட்டு வளர்ச்சிச் சங்கத்தால் பிறநாடுகளுக்குத் தரப்பட்ட மிகப்பெரிய கடன்தொகையாகும்.

செய்தி மடல்

கனடாவிலுள்ள ஆசிரியர்களும், இலத்தீன் அமெரிக்காவிலுள்ள ஆசிரியர்களும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதற்குக் கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பு



பசியினின்று விடுதலை என்னும் இயக்கம் உலகெங்கணும் உள்ள இளைஞர்களின் ஆதரவை, பசியையும், குறை முன்னேற்றத்தையும் எதிர்ப்பதற்கு ஒன்று திரட்டும் நோக்குடன் நடத்தப்படுகிறது.

பசியை ஒழிக்க விருக்கும் வேண்டு கோளின் சின்னமே மேலே யுள்ள படம். அச்சின்னம் இளைஞர்கள் அணிந்து கொள்ளும் பாட்ஜுகளின் மீதும், டாகுமெண்ட்களிலும், வெளியீடுகளின் மீதும் பொறிக்கப்படும்.

ஒரு செய்தி மடலைத் துவக்கியுளது. அம்மடல் ஸ்பானிய மொழியில் வெளியிடப்பட்டு இலத்தீன் அமெரிக்காவிலுள்ள ஆசிரியச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. அச்செய்தி மடலில் கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பின் நடவடிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

இச்செய்தி மடலின் முதல் வெளியீடு, அர்ஜன்டினா, சாந்தஃபியைச் சேர்ந்த குமாரி மார்ட்டினெஸ் டிரக்கோ அவர்கள் கனடியின் ஆசிரியக் கூட்டிணைப்பிற்கும், அதில் அங்கம் வகிக்கும் சங்கங்களுக்கும் வந்ததைப்பற்றிச் சொல்லுகிறது.

கனடியன் ஆசிரியர்க் கூட்டிணைப்பு கடந்த ஐந்தாண்டுக் காலமாக "விக்டாப்" நடவடிக்கைகளில் பங்குகொண்ட காரணத்தால், இலத்தீன் அமெரிக்காவிலுள்ள ஆசிரியச் சங்கங்களின் தலைவர்களுடன் கனடியன் ஆசிரியர் பலர் நீடித்த நட்பை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது என்பது அம்மடலில் குறிக்கப்பட்டுளது.

பென் பிராடின்ஸ்கியின் ரஷ்யப் பயணம்

'விக்டாப்பின்' துணை உறுப்பான அமெரிக்காவின் கல்விப் பத்திரிகைச்

சங்கத்தின் (Education Press. Association of America) முன்னுள் தலைவர் பெண். பிராடின்ஸ்கி அண்மையில், சோவியத் ரஷ்யாவில் மூன்று வாரகாலம் கல்வி தொடர்பான பத்திரிகைத் தொழிலைப்பற்றி ஆராய்ச்சி நடத்தினுர்; முக்கியக் கல்விப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைச் சந்தித்தார்.

கல்வி செய்திப் போக்கு வரத்துச் சிக்கல்கள் குறித்து, மாஸ்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களுடன், அவர் உரையாடினுர்.

1963-ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோயிலில், 'விக்டாப்' பேராள் கூட்டம் நடந்தபோது, கல்விப் பத்திரிக்கையாளரின் தொழிற்சாலை ஒன்று நடந்தது. அச் சாலையின் அறிவுரையாளராகத் திருவாளர் பிராடின்ஸ்கி பணிபுரிந்தார்.

இப்படங்கள் 1965-ஆம் ஆண்டு Unicef நல்வாழ்த்தட்டைத் திட்டத்தின் கீழ் வெளியிடப் பட்டுள்ள நல்வாழ்த்துப் படங்களாகும்.

சென்ற ஆண்டு நல்வாழ்த்து அட்டைகளை விற்றதில் Unicef-க்கு 23,00,000 டாலர் வருமானம். 5,295 தாய்சேய் நல விடுதிகளுக்குத் தேவையான பொருள்கள், மருந்துகள் 12,50,000 சயரோக நோயாளிகள் வீட்டிலிருந்தவாறே தங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளப் பயன்படும் மருந்துகள், 4-மிலியன் குழந்தைகளுக்குத் தேவைப்படும் உயிர்ச்சத்து மாத்திரைகள் முதலியன வாங்குதற்கு அப்பணம் போதுமானதாய் இருந்தது.

இவ்வாழ்த்துக்களில் உள்ள படங்களை வரைவோர் உலகப புகழ்பெற்ற ஓவியர்கள் ஆவார்கள். இவ்வாழ்த்தட்டைகளைத் தவிர Unicef Date book Engagement Calendar என்ற படம் நிறைந்த புத்தகத்தையும் ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய இருமொழிகளில் வெளியிடுகிறது.

Unicef Greeting Cards,
United Nations
New York
10017, U. S. A.

என்ற முகவரிக்கு எழுதினுல் ஒரு முழுவண்ணச் சிறு வெளியீடு இலவசமாக அனுப்பப்படும்.